IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
OS.No. 140/2013
Deposition of witness for PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பாலாஜி | Caste | : | |
| Father Name | : | தாமோதரன் | Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 23rd day of September, 2025.

கூடுதல் சத்திய பிரமாணம் தாக்கல் செய்வதன் பேரில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. சர்வே எண்.285/2 ல் உள்ள 10 செண்ட்டில் உள்ள கிணறு மற்றும் கிணற்று பக்கத்தில் உள்ள மேட்டுபக்கத்தில் அருகில் உள்ள கால்வாய், EB deposit, எச்.பி.மோட்டார் ஆகியவற்றில் மூன்றில் ஒரு பாகம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

2. எனக்கு கொடுக்கப்பட்ட செட்டில்மென்ட்டில் 10 சென்ட் என்று குறிப்பிட்டு சொல்லப்பட்ட வாசகம் மூலப்பத்திரத்தில் 10 சென்ட் கிணறு மற்றும் கிணற்றுப்பகுதி என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்று சொன்னால் இல்லை. என்னுடைய அப்பா உடன் பிறந்தவர்கள் அவரோடு சேர்த்து மூன்று பேர் அண்ணன் தம்பிகள் ஆவர். மேற்படி மூன்று பேருக்கும் அவருடைய பங்கை சமமாக பிரித்து கொடுத்தார்களா என்றால் இல்லை.

3. வழக்குரையில் நான் மூன்றில் ஒரு பாகம் என்றுதான் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் குறிப்பிட்டு இருக்கிறேன். ஆனால் மூன்று பாகங்களிலும் ஏற்றத்தாழ்வுகள் உள்ளன. என்னுடைய வழக்குரையில் சர்வே எண்.288 ஐ பற்றி குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி சர்வே எண்ணிற்கு விஸ்தீரணம் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் இல்லை. மேற்படி சர்வே

எண்ணில் நான்கில் ஒரு பாகம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

4. நான்கு பாகம் கோரப்பட்டுள்ள நிலையில் அந்த நான்கு பங்கு யாருக்கு என்று சொன்னால் ரங்கசாமியினுடைய தாயார் தாயார் அம்மாள் குடும்பத்துக்கு மூன்று பாகமும் எங்களுக்கு ஒரு பாகம் என்று குறிப்பிட்டேன். 10.12.1961 ஆம் ஆண்டு தேதியிட்ட மூலப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் எனது தாத்தாவிற்கு உரிமையுள்ளதாகும். எனக்கு கொடுக்கப்பட்ட செட்டில்மென்ட் பத்திரத்தில் சர்வே எண்.288 என் தாத்தாவிற்கு உரிய சொத்தில் இருந்துதான் அவர் கொடுத்தார். அதில் நான்கில் ஒரு பாகம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

5. ரங்கசாமி என்பவர் எங்கள் குடும்பத்துக்கும் அவருக்கும் சம்மந்தம் இல்லை. என்னுடைய தாத்தா எழுதிகொடுக்கும்போது மூன்றில் ஒரு பாகம்தான் எழுதி கொடுக்க முடியும் என்று சொன்னால் சரியல்ல. ரங்கசாமி என்பவருக்கு ஒரு பாகம் கொடுக்கப்பட்டதாக சொல்லி என்னுடைய செட்டில்மென்ட் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது நான் மோசடியாக தயார் செய்த சான்று என்று சொன்னால் சரியல்ல.

6. நான் என்னுடைய பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளது போல் அது என்னுடைய தாத்தாவுடைய அப்பா பெரியப்புக்கு உடையது என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய தாத்தாவிற்கு இரண்டு துணைவியார். பெயர் எனக்கு தெரியாது. என்னுடைய அம்மா பெயர் சாரதம்மாள். என்னுடைய அப்பா இரண்டு துணைவிகளில் யாருக்கு பிறந்தார் என்பது எனக்கு தெரியாது. ராஜிமேஸ்திரிக்கு பாப்பாத்தியம்மாள் மற்றும்

முனியம்மாள் என்ற பெயரில் இரண்டு துணைவியார் இருந்தார்கள் என்று சொன்னால் ஞாபகமில்லை. முனியம்மாளுக்கும் ராஜி மேஸ்திரிக்கும் பிறந்தவர் தான் சாம்பசிவம் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. ராஜி மேஸ்திரிக்கும் பாப்பாத்தியம்மாளுக்கும் பிறந்தவர்கள்தான் தாமோதரன், விஸ்வநாதன் என்று சொன்னால் அதுபற்றி கேள்விப்பட்டுள்ளேன்.

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

(Sd/-)..K.Inbarani
DISTRICT MUNSIF
KATPADI